**நவம்பர் – 05**

# TNPSC துளிகள்

- கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உள்ள அதன் கணினி அமைப்புகளில் மால்வேர் (தரவுகளைத் திருடுவது) இருப்பதை இந்திய அணுசக்திக் கழகம் (Nuclear Power Corporation of India - NPCIL) உறுதிப் படுத்தியுள்ளது. NPCIL ஆனது அணுசக்தித் துறையின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பாகும். அணுசக்தித் துறையானது பிரதம மந்திரி அலுவலகத்தின் கீழ் வருகின்றது.
- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பரமஹம்ச யோகானந்தாவின் 125வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அவர் குறித்த ஒரு சிறப்பு நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளார். யோகானந்தா மேற்கு நாடுகளில் யோகாவின் தந்தை என்று அறியப் படுகின்றார்.
- சமீபத்தில் புஷ்கர் கண்காட்சியானது ராஜஸ்தானில் நடத்தப் பட்டது. இது புஷ்கர் (ராஜஸ்தான், இந்தியா) நகரில் ஒவ்வொரு ஆண்டும் பல நாட்கள் நடைபெறும் கால்நடைக் கண்காட்சி மற்றும் கலாச்சார விழாவாகும். இது ஒட்டகம், குதிரை மற்றும் கால்நடை குறித்த இந்தியாவின் மிகப்பெரிய கண்காட்சிகளில் ஒன்றாகும்.
- கிருஷ்ணகிரிக்கு அருகிலுள்ள வேப்பன ஹல்லியில் 2000 ஆண்டுகள் பழமையான பாறைக் கீறல்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டன. இது தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பழமையானது மற்றும் மிகப் பெரியது என்று கருதப் படுகின்றது.
- 1 கிலோ அரிசிக்கு 1 கிலோ நெகிழிக் கழிவுகளைச் சேகரிக்கும் பணியை தெலுங்கானாவின் முலுகு மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் ஷார்ஜா சர்வதேசப் புத்தகக் கண்காட்சியானது ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஷார்ஜாவில் நடத்தப் பட்டது. இது உலகின் சிறந்த புத்தக வெளியீட்டு நிகழ்வுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது அரபு நாடுகளில் மிகப்பெரிய ஒரு நிகழ்வாக கருதப் படுகின்றது.
- "செனாப் பள்ளத்தாக்கு பகுதியில் அமைதி மற்றும் செழிப்பை ஊக்குவிக்கும்" நோக்கத்துடன் ஜம்மு-காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் நடைபெற்ற திருவிழா 'சங்கம் 2019-20' ஆகும்.
    - இந்த ஆண்டுக்கான கருப்பொருள் "நம் தேசத்தை உருவாக்குவோம்" என்பதாகும்.
- லடாக் யூனியன் பிரதேசமானது "ஜி.பி பந்த் இமயமலை சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின்" ஒரு புதிய பிராந்திய மையத்தைப் பெறுகிறது.
    - இந்நிறுவனத்தின் தலைமையகம் கோசி-கட்டர்மாலில் (உத்தரகாண்ட்) உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முதல் தனுஷ் படைப் பிரிவைப் பெறவும், 2022 ஆம் ஆண்டிற்குள் அனைத்து 114 துப்பாக்கிகளையும் பெறவும் இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது.
    - தனுஷ் 1980 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட ஸ்வீடிஷ் போபர்ஸ் வகைத் துப்பாக்கியின் மாதிரியைக் கொண்டு உள்நாட்டில் மேம்படுத்தப்பட்ட வகையாகும்.

# தேசியச் செய்திகள்

## நிணநீர் யானைக்கால் நோய் (யானைக்கால் நோய்) பற்றிய தேசியக் கருத்தரங்கு

- "யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக ஒன்றிணைதல்" என்ற கருப்பொருள் கொண்ட ஒரு தேசியக் கருத்தரங்கானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஹர்ஷ வர்தனால் தொடங்கி வைக்கப் பட்டது.
- மேலும் '2021 ஆம் ஆண்டிற்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீதான அழைப்பிலும்' மத்திய அமைச்சர் கையெழுத்திட்டார்.
- நிணநீர் யானைக்கால் நோயானது பொதுவாக யானைக்கால் நோய் என்று அழைக்கப் படுகின்றது. இது ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகக் கருதப் படுகின்றது.
- இது ஒரு நோய்ப் பரப்பியின் மூலம் பரவும் நோயாகும். இது ஃபிலாரியோடிடியா குடும்பத்தைச் சேர்ந்த உருளைப் புழுக்கள் என வகைப்படுத்தப்பட்ட ஒட்டுண்ணிகளின் தொற்று காரணமாக ஏற்படுகிறது.

## தேசிய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இணையமைச்சரான ஸ்ரீபத் நாயக் என்பவர் (தனிப் பொறுப்பு) தோல் நோய்களுக்கான தேசிய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.
- இந்த நிறுவனமானது ஹைதராபாத்தில் உள்ள மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மேம்படுத்தப் பட்டதாகும்.
- ஆயுஷ் ஆனது ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றை உள்ளடக்கிய 6 இந்திய மருத்துவ முறைகளை உள்ளடக்கியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றக் கூட்டம்

- உஸ்பெகிஸ்தானில் உள்ள தாஷ்கண்டில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (Shanghai Cooperation Organisation - SCO) நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றத்தின் 18வது கூட்டத்தில் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றினார்.
- இந்த மாநாட்டில் பிரதமர் மோடியின் சிறப்புத் தூதராக அவர் பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- இந்தக் கூட்டத்தின் போது, 2020 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றத்தின் அடுத்த கூட்டம் இந்தியாவில் நடத்தப் பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் போது ரஷ்யாவால் நடத்தப்பட்ட SCO கூட்டு இராணுவப் பயிற்சியான "CENTER 2019" என்ற இராணுவப் பயிற்சியானது கௌரவப்படுத்தப் பட்டது.
- SCO ஆனது எட்டு முழு உறுப்பினர் நாடுகளையும் ஆறு "கலந்துரையாடல்

நாடுகளையும்" மற்றும் நான்கு "பார்வையாளர் நாடுகளையும்" கொண்டுள்ளது.




## UNFCCCன் 25வது மாநாடு

- இந்த ஆண்டின் காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தம் (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) அல்லது ஐ.நா. காலநிலை மாநாட்டை நடத்துவதற்கு சிலிக்குப் பதிலாக ஸ்பெயின் நாடு மாட்ரிட் நகரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த ஆண்டானது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றத்தின் 25வது மாநாடாகும்.
- கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் காலநிலை மாநாடானது போலந்தின் கோட்டோவைஸில் நடத்தப் பட்டது.
- அமைதியின்மையை எதிர்கொண்டுள்ள சிலி அரசாங்கமானது நவம்பர் மாதத்தில் ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பின் (Asia-Pacific Economic Cooperation - APEC) பொருளாதார உச்சி மாநாட்டை நடத்துவதையும் கை விட்டுள்ளது.

*மாநாட்டின் முக்கிய நிகழ்வுகள் பின்வருமாறு:*

- UNFCCC உறுப்பு நாடுகளின் 25வது மாநாடு.
- கியோட்டோ நெறிமுறைக்கான உறுப்பு நாடுகளின் 15வது கூட்டம் (Kyoto Protocol - CMP15).
- பாரிஸ் ஒப்பந்தத்திற்கான உறுப்பு நாடுகளின் இரண்டாவது கூட்டம் Paris Agreement (CMA2).

# பொருளாதாரச் செய்திகள்

## புதிய தேசிய ஓய்வூதியத் திட்ட விதிகள்

- தற்பொழுது வெளிநாடு வாழ் இந்தியர்கள் (OCI - Overseas Citizens of India) தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (National Pension System - NPS) முதலீடு செய்ய அனுமதிக்கப்பட இருக்கின்றார்கள்.
- தேசிய ஓய்வூதிய முறைமை என்பது இந்தியாவில் தன்னார்வப் பங்களிப்பு முறையில் வரையறுக்கப்பட்ட ஒரு பங்களிப்பு ஓய்வூதிய முறையாகும்.
- 2004 ஆம் ஆண்டு ஜனவரி 1க்குப் பிறகு சேர்ந்த இந்திய அரசின் கீழ் பணியாற்றும்

அனைத்து ஊழியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியப் பயன்களை நிறுத்துவதற்கான இந்திய அரசின் முடிவின் காரணமாக NPS தொடங்கப்பட்டது.

- இந்தத் திட்டம் ஆரம்பத்தில் அரசு ஊழியர்களுக்காக மட்டுமே வடிவமைக்கப் பட்டிருந்தாலும், 2009 ஆம் ஆண்டிலிருந்து 18 முதல் 60 வயதுக்குட்பட்ட இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் இதில் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணையமான ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (Pension Fund Regulatory and Development Authority - PFRDA) 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 அன்று இந்திய அரசால் நிறுவப் பட்டது.
- PFRDA ஆனது தேசிய ஓய்வூதிய முறைமையை ஒழுங்குபடுத்தி அதனை நிர்வகிக்கின்றது. மேலும் இது இந்திய அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, அமைப்புசாரா துறைக்காக வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டப் பலன்களான அடல் ஓய்வூதியத் திட்டத்தையும் நிர்வகிக்கின்றது.

## நிர்விக் திட்டம்

- இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கூட்டு ஸ்தாபனம் ஆனது கடன் கிடைப்பதை மேம்படுத்துவதற்கும் கடன் வழங்கும் பணியை எளிதாக்குவதற்கும் நிர்விக் எனப்படும் ஒரு ஏற்றுமதி கடன் காப்பீட்டு திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது 90% அசல் மற்றும் வட்டியை உள்ளடக்கி இருக்கும் ஒரு காப்பீட்டுப் பாதுகாப்பு உத்தரவாதமாகும்.
- இந்தக் காப்பீட்டு அட்டையில் காப்பீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய கடன்கள் அடங்கும்.
- ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கூட்டு ஸ்தாபனம் ஆனது முற்றிலும் மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்திற்கு சொந்தமானது.

## தென்கிழக்கு ஆசியாவிற்கான பொருளாதாரக் கண்ணோட்டம்

- தென்கிழக்கு ஆசியா, சீனா மற்றும் இந்தியாவுக்கான பொருளாதாரக் கண்ணோட்டம் ஆனது வளர்ந்து வரும் ஆசியாவில் பிராந்திய பொருளாதார வளர்ச்சி, மேம்பாடு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு குறித்து இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020-24 ஆம் ஆண்டுகளில் 6.6% வளர்ச்சியடையக் கூடும். இது 2013-17 ஆண்டுகளுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரியான 7.4% ஐ விடக் குறைவாக உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## L2ப்ரோ இந்தியா – கைபேசிச் செயலி

- L2ப்ரோ இந்தியா (உங்களது கண்டுபிடிப்புகளைப் பாதுகாக்கவும் அதிகரிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்) என்பது அறிவுசார் சொத்துரிமை மீதான ஒரு கைபேசிச் செயலியாகும்.

- ஜெர்மனி, ஐக்கிய ராஜ்ஜியம், இத்தாலி மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளில் L2ப்ரோ என்ற செயலி வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

## இன்டிஜென் (IndiGen) - அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் திட்டம்

- இது ஒரு நபரின் மரபணுக்களைத் தடையில்லாமல் முழுமையாக வரைபடமாக்குவதற்காக அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தினால் (Council of Scientific and Industrial Research – CSIR) நிர்வகிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- CSIR – மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மையம் (Institute of Genomics and Integrative Biology - IGIB) மற்றும் CSIR - செல் & மூலக்கூறு உயிரியல் மையம் (Centre for Cellular and Molecular Biology - CCMB) ஆகியவை இத்திட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன.
- மனித மரபணு ஆனது சுமார் 3.2 பில்லியன் அடிப்படை இணைகளைக் கொண்டுள்ளது.

## டெக்சாகர்

- டெக்சாகர் என்பது இந்தியாவின் இணைய தொழில்நுட்ப திறன்களின் ஒரு சக்திவாய்ந்த தேசியக் களஞ்சியமாகும்.
- இது இந்திய இணையப் பாதுகாப்பு ஆணையத்துடன் இணைந்து தேசிய இணையப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தால் தொடங்கப் பட்டது.
- இந்திய இணையப் பாதுகாப்பு ஆணையம் என்பது இந்தியாவில் தரவுப் பாதுகாப்பு குறித்து நாஸ்காம் அமைப்பால் அமைக்கப்பட்ட, லாப நோக்கற்ற, ஒரு தொழில்சார் அமைப்பு ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காலநிலை மாற்றம் தொடர்பான 29வது BASIC அமைச்சரவைக் கூட்டம்

- காலநிலை மாற்றம் குறித்த BASIC (பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா, சீனா) நாடுகளின் 29வது அமைச்சரவைக் கூட்டமானது சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்றது.
- 2020 ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 100 பில்லியன் அமெரிக்க டாலர்களை வெளிப்படையான மற்றும் மானிய அடிப்படையிலான முறையில் வழங்குவதற்காக காலநிலை நிதிக்கான பொறுப்புகளை நிறைவேற்றுமாறு வளர்ந்த நாடுகளை அமைச்சரவைக் கூட்டமானது கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்தியா 30வது BASIC அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த உள்ளது.

### *BASIC பற்றி*

- BASIC நாடுகள் என்பவை புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நான்கு பெரிய நாடுகளான பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் ஒரு குழுமமாகும்.
- அவர்களின் பொதுவான குறைந்தபட்ச தேவை வளர்ந்த நாடுகளால் பூர்த்தி செய்யப்படா விட்டால் ஒன்றுபட்டு வெளிநடப்பு செய்வது உட்பட, கூட்டாகச் சேர்ந்து செயல்பட 2009 ஆம் ஆண்டின் கோபன்ஹேகன் காலநிலை உச்சி மாநாட்டில் இந்த நான்கு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## திப்பு சுல்தான் – பாடத் திட்டத்திலிருந்து நீக்கம்

- கர்நாடக மாநில அரசானது திப்பு சுல்தான் பற்றிய அத்தியாயங்களை தனது மாநிலப் பள்ளி பாடத் திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது.
- இந்த ஆண்டு திப்பு ஜெயந்தி விழாவினை ரத்து செய்ய அம்மாநில அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது. இந்த விழாவானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மைசூர்ப் புலி என்றும் அழைக்கப்படும் திப்பு சுல்தான் 1782 ஆம் ஆண்டு முதல் 1799 ஆம் ஆண்டு வரை முந்தைய மைசூர்ப் பகுதியின் ஆட்சியாளராக இருந்தார்.

## மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்கள்

- மத்திய வட கிழக்குப் பகுதி அமைச்சகமானது (North Eastern Council - NEC) ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் புதிய மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க இருக்கின்றது.
- NEC அமைச்சகத்தின் கீழ் உள்ள CBTC (பிரம்பு மற்றும் மூங்கில் தொழில்நுட்ப மையம் - Cane and Bamboo Technology Centre) ஆனது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைமை அமைப்பாகும்.
- ஜம்மு, ஸ்ரீநகர் மற்றும் லே ஆகிய இடங்களில் மூன்று புதிய மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைய இருக்கின்றன.

## 6 லட்சம் தீபங்கள்

- ஆறு லட்சத்துக்கும் மேற்பட்ட தீபங்களை சரயு ஆற்றங்கரையில் ஒளிரச் செய்து அயோத்தி நகரில் புதிய வரலாறு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அரிய செயலின் மூலமாக உத்தரப் பிரதேச அரசு ஏற்கனவே எண்ணெய் விளக்குகளை மிகப் பெரிய அளவில் காட்சிப்படுத்திய தனது சொந்த கின்னஸ் உலக சாதனையை முறியடித்துள்ளது.
- இந்த ஆண்டில் சரயு ஆற்றங்கரையில் ஏற்றப் பட்ட மண் விளக்குகளின் எண்ணிக்கையானது கடந்த ஆண்டில் ஏற்றப் பட்ட தீபங்களின் எண்ணிக்கையான மூன்று லட்சம் என்பதற்கும் அதிகமாக இருந்தது.

## ஆந்திராவில் கோட்டிப்ரோலு

- இன்றைய ஆந்திர மாநிலத்தில் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் ஒரு கடல்சார் தொழில் மையம் இருந்ததை இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளது.
- இங்கு கிடைக்கப்பட்ட செங்கற்களின் அளவுகள் கிருஷ்ணா பள்ளத்தாக்கில் ஆட்சி செய்த சாதவாஹனர்கள்/இச்சவாகு மன்னர்கள் ஆகியோர் காலத்திற்கு இணையானவை.
- மேலும், விஷ்ணுவின் ஆயுதமேந்திய நான்குச் சிற்பங்களையும் இந்தக் குழு இங்கு கண்டுபிடித்துள்ளது. அதன் தலைக் கவசம் மற்றும் ஆடைகளின் பகுப்பாய்வின் படி இந்தச் சிற்பங்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என அறியப் படுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2019 SEED விருதுகள்

- 2019 ஆம் ஆண்டின் சமபங்கு அதிகாரம் மற்றும் மேம்பாட்டிற்காக அறிவியல் (SEED - Science For Equity Empowerment and Development) என்ற விருதிற்குப் பதினான்கு ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- 2002 ஆம் ஆண்டில் ஜோஹன்னஸ்பர்க்கில் நடத்தப்பட்ட நீடித்த வளர்ச்சி மீதான உலக உச்சி மாநாட்டின் போது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UN Environment), ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme - UNDP) மற்றும் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (International Union for Conservation of Nature - IUCN) ஆகியவற்றால் SEED விருது நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டின் பிரிவுகள் SEED குறைந்த கார்பன், SEED ஆப்பிரிக்க விருதுகள், SEED தென்னாப்பிரிக்க காலநிலைத் தழுவல் விருதுகள் மற்றும் SEED பாலின சமத்துவ விருது ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.
- SEED குறைந்த கார்பன் பிரிவின் கீழ், உத்தரப் பிரதேசத்தின் கான்பூரில் அமைந்துள்ள ஐக்யா ஆர்கானிக்ஸ் என்ற அமைப்பானது இந்தியாவில் இருந்து இந்த விருதை வென்றுள்ளது.
- ஐக்கியா என்ற அமைப்பைத் தவிர, ஸ்டோன்சூப், ஆரோஹனா சுற்றுச்சூழல் சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் தீர்வுகள் மற்றும் விவசாயிகள் புதிய மண்டலம் போன்றவை உள்ளிட்ட நான்கு அமைப்புகள் இந்தியாவில் இருந்து இந்த விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளன.




## 2019 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நடவடிக்கைப் பதக்கம்

- டெல்லி காவல்துறை சிறப்புப் பிரிவு மற்றும் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறை படை ஆகிய படைகளுக்கு 2019 ஆம் ஆண்டுக்கான மத்திய உள்துறை

அமைச்சரின் சிறப்பு நடவடிக்கைப் பதக்கம் வழங்கப் பட்டது.

- மதிப்பு மிக்க உள்துறை அமைச்சரின் சிறப்புச் செயல்பாட்டு பதக்கம் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறுவப் பட்டது.
- இந்தியாவில் மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச காவல்துறை மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளில் குற்றங்களை விசாரிப்பதற்கான உயர் தொழில்முறை தரங்களை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### வியாஸ் சம்மன்

- பிரபல இந்தி மொழிக் கவிஞர் லீலாதர் ஜகூரி, "ஜிட்னே லாக் உட்னே பிரேம்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்காக 2018 ஆம் ஆண்டின் 28வது வியாஸ் சம்மன் விருதைப் பெற்றார்.
- வியாஸ் சம்மன் என்பது இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு முதலாக வழங்கப்படும் ஒரு இலக்கிய விருது ஆகும்.
- கே.கே. பிர்லா அமைப்பானது கடந்த 10 ஆண்டுகளில் இந்தியரால், இந்தி மொழியில் எழுதி வெளியிடப்பட்ட ஒரு சிறந்த இலக்கியப் படைப்பிற்காக ஆண்டுதோறும் இந்த விருதினை வழங்கி வருகின்றது.

## விளையாட்டுச் செய்திகள்

### 17 வயதிற்கு உட்பட்டோருக்கான FIFA கோப்பையின் – சின்னம்

- 17 வயதிற்கு உட்பட்டோருக்கான FIFA மகளிர் உலகக் கோப்பையின் அதிகாரப் பூர்வ சின்னம் வெளியிடப்பட்டது.




- இது 17 வயதிற்குட்பட்டோருக்கான FIFA மகளிர் உலகக் கோப்பையின் 7வது பதிப்பாகும். இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சர்வதேசப்

பெண்கள் இளையோர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியாகும்.

- இந்தப் போட்டியானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவில் நடைபெற இருக்கின்றது.
- இது FIFA மகளிர் கால்பந்துப் போட்டியை இந்தியா முதல்முறையாக நடத்துவதைக் குறிக்கும்.

# முக்கிய தினங்கள்

## இந்திய நிலக்கரி அமைப்பின் நிறுவன தினம் - நவம்பர் 1

- இந்திய நிலக்கரி அமைப்பானது (Coal India Limited - CIL) நவம்பர் 1 ஆம் தேதியன்று தனது 45வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தக் கொண்டாட்டத்தின் போது, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சரான பிரஹலாத் ஜோஷி இந்திய நிலக்கரி அமைப்பானது 2020-21 நிதியாண்டில் 750 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்யும் என்றும் 2023 - 24 ஆம் நிதியாண்டில் அதற்கும் அதிகமாக ஒரு பில்லியன் டன் அளவிற்கு நிலக்கரியை உற்பத்தி செய்யும் என்றும் கூறினார்.
- நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் 82% அளவிற்கு, அதாவது 660 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்யக் கூடிய இலக்கானது தற்போது CIL நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் மத்திய அரசானது நிலக்கரித் துறையில் நேரடி முறையின் கீழ் 100% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்துள்ளது.

# இதரச் செய்திகள்


## குரு நானக்கின் 550வது பிறந்த தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் வெளியிட்டுள்ள நாணயம்

- குருநானக்கின் 550வது பிறந்த தினத்தின் நினைவாக பாகிஸ்தான் அரசு ஒரு வெள்ளி நாணயத்தை வெளியிட்டுள்ளது.
- இந்த நாணயத்தின் மதிப்பு 50 ரூபாய் ஆகும்.



## கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதை ஒப்பந்தம்

- சர்வதேச எல்லையான தேரா பாபா நானக் அருகே ஜீரோ பாயிண்டில் தொடங்கும் கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதையைச் செயல்படுத்துவதற்காக இந்தியா சமீபத்தில் பாகிஸ்தானுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இது இப்போது இந்தியாவில் இருந்து கர்தார்பூர் செல்லும் சீக்கியர்களுக்கு விசா இல்லாத ஒரு பெருவழிப் பாதையாகக் கருதப் படுகிறது.
- இந்தப் பெருவழிப் பாதையானது பஞ்சாப் – குர்தாஸ்பூரில் (இந்தியா) உள்ள தேரா பாபா நானக் கிராமத்திலிருந்து குருத்வாரா தர்பார் சாஹிப், கர்தார்பூர் (பாகிஸ்தான்) வரை மேம்படுத்தப்பட உள்ளது.
- 1539 ஆம் ஆண்டில் குருநானக் இறக்கும் வரை அவர் தங்கி இருந்த இறுதி இடமாக கர்தார்பூர் சாஹிப் கருதப் படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★